கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டுச் சிறப்புக் கலைமாணித் தேர்வு

2012/2013 (மார்ச் 2015)

TLS 2133 தமிழில் பெண்கள் இலக்கியம்

**Women's Writings in Tamil**

LIBRARY 01 JUN 2015 EASTERN UNIV

ரம்: 3 மணித்தியாலங்கள்

வையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (அ) "பெண்கள் இலக்கியம்" என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துக (10 புள்ளிகள்)

   (ஆ) தமிழில் பெண்களிலக்கியப் பாரம்பரியமொன்றை நிறுவவேண்டியதன் அவசியத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

2. "பெண்களது உடல், உள மற்றும் பண்பாடு சார்ந்த தனித்துவமான அனுபவங்களே அவர்களது மொழியிலும் எடுத்துரைப்பு உத்திகளிலும் தனித்துவமான அழகியலை ஏற்படுத்துகின்றன." சங்ககால ஔவையின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை ஆராய்க. (25 புள்ளிகள்)

3. "காரைக்காலம்மையார் யாப்பில் புதிய வடிவங்களையும் கவிதைப் பொருள் மரபில் புதிய உத்தி முறைகளையும் கையாண்டுள்ளார்." இக்கூற்றை அவரது பாடல்களைச் சான்றாகக் கொண்டு ஆராய்க. (25 புள்ளிகள்)

4. தமிழ் நாவல் வளர்ச்சியில் ராஜம்கிருஷ்ணன் **அல்லது** ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்துக்குரிய இடத்தினை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

5. ஊடக விளம்பரங்களில் பெண்கள் சித்திரிக்கப்படுமாற்றைத் தமிழ் ஊடக விளம்பரங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

   (அ) வைணவ பக்தி இலக்கிய மரபில் ஆண்டாள்

   (ஆ) மொழி - அதிகாரம் - பால்நிலை

   (இ) நாட்டார் பாடல்களில் பெண்களின் எதிர்ப்புக் குரல்கள்

   (ஈ) பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறுகதைகள்

   (உ) தமிழில் பெண்கள் சஞ்சிகைகள்

(12½ × 2 = 25